


மக்களுக்கான ஆட்சியில் மகத்தான சாதனைகள் படைத்து வரும் நம் 'திராவிட மாடல்' ஆட்சிக்கும் வலுச்சேர்க்கும் விதமாக விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி – திருவாமத்தூர் பகுதியில் நேற்று முன்தினம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்கு சேகரித்ததையும், அவரது உரை கேட்க பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருப்பதையும் இப்படத்தில் காணலாம்.




கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட காணை பகுதியில் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு வாக்குகள் கோரி, ஆங்கே திரண்டிருந்த ஆயிரமாயிரவர் மத்தியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்கு சேகரித்தார்.




சமூகநீதிப் பாதையில் இந்தியாவிற்கே வழிகாட்டும் நம் திராவிட மாடல் அரசிற்கு, வலுச்சேர்க்கும் வகையில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பனமலைப்பேட்டை பகுதி மக்களிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்குகள் சேகரித்தார்.




விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து அவரின் சொந்த ஊரான அன்னியூர் பகுதி மக்களிடம் கழக அரசின் சாதனைகளை விளக்கி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்குகள் சேகரித்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி உள்ளார்.